MC 5/2023 Date: 05.09.2024

ம.சா.1 தனலட்சுமி க/பெ இன்பசேகரன்

குறுக்கு விசாரணை :

நான் முதுநிலை வணிகவியல் பட்டப்படிப்பும், கூட்டுறவுத்துறை பட்டயப்படிப்பும் முடித்துள்ளேன். எனக்கும், எதிர்மனுதாரருக்கும் காஞ்சிபுரம் கச்சபேஸ்வரர் கோவிலில் திருமணம் நடந்தது. திருமணம் நடந்து 4 வருடம் ஆகிறது. எங்களது திருமணத்தை போட்டோ மற்றும் வீடியோ எடுத்தோம். திருமணத்திற்கு எனக்கு 30 சவரனும், எதிர்மனுதாரருக்கு 5 சவரனும் எனது பெற்றோர் செய்தனர். சீர்வரிசைப்பொருட்களை வாங்கியதை காட்டும் ரசீதுகளை இந்த மனுவில் தாக்கல் செய்யவில்லை. திருமணத்தின் போது சீர்வரிசைப்பொருட்கள் கொடுக்கப்பட்டதை காட்டும் போட்டோ அல்லது வீடியோ உள்ளதா எனக்கேட்டால் பின்னிட்டு தனிக்குடித்தனம் வைக்கும்போது பொருட்களை வாங்கிக்கொடுக்க சொன்னதால் அவற்றை திருமண நாள் அன்று கொடுக்கவில்லை. மனுவிலும், தற்போதும் எனக்கு 30 சவரன் போட்டதாக சொல்லும் நிலையில் சாட்சிய வாக்குமூலத்தில் அதனை 20 பவுன் என சொல்லியுள்ளேன் என்றும், இவற்றில் எது உண்மை எனக்கேட்டால் மனுவிலும், தற்போதும் சொன்ன30 பவுன் என்பது தான் உண்மை சாட்சி வாக்குமூலத்தில் பொய் சொல்லியுள்ளேனா எனக்கேட்டால் திருமணத்தின் போது 20 பவுன் நகை என் பெற்றோர் கொடுத்தார்கள். பின்னர் என் மாமியார் மேலும் நகை வாங்கிவர சொன்னதால் என் பெற்றோரிடம் கேட்டு 10 பவுன் நகை பெற்றேன். மேற்படி விவரங்களை விளக்கமாக மனுவிலும், சாட்சிய வாக்குமூலத்திலும் சொல்லவில்லை. நான் சொல்லுவது போல என் பெற்றோர் எனக்கு நகை போடவில்லை என்றும், இந்த மனுவிற்காக அவ்வாறு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் அது சரியல்ல. திருமணத்திற்கு பிறகு 1 மாதம் நானும் எதிர்மனுதாரரும் பொன்னூரில் இருந்தபோது எங்களுக்குள் சண்டை ஏதும் ஏற்படவில்லை. அதன் பின்னர் நான் செங்கல்பட்டில் எதிர்மனுதாரர் வீட்டில் இருந்தபோது நான் சென்ற 1 வாரத்திற்குள் எனக்கும், எதிர்மனுதாரரின் தாயாருக்குமிடையில் பிரச்சனை ஏற்பட்டது. எதிர்மனுதாரரின் தாயார் என்னை திட்டியதற்காகவோ கொடுமைப்படுத்தியதற்காகவோ காவல் நிலைய புகார் ஏதும் கொடுத்தேனா எனக்கேட்டால் ஆரம்ப காலம் என்பதால் புகார் கொடுக்கவில்லை. எதிர்மனுதாரரும், அவரது பெற்றோரும் என்னை அன்போடு பார்த்துக்கொண்டார்கள் என்றும், நான் தான் கூட்டுக்குடும்பமாக இருக்க பிடிக்காமல் அவர்களோடு பிரச்சனை செய்தேன் என்பது சரியல்ல. என்

கணவரின் தாயாரும், சகோதரரும் என் கணவர் இல்லாத நேரத்தில் என்னிடம் பிரச்சனை செய்ய ஆரம்பித்ததால் நானும், என் கணவரும் தனிக்குடித்தனம் சென்றோம். எதிர்மனுதாரரின் வயதான தாயாரை நான் தான் திட்டி அடித்துவிட்டேன் என்றும், அதனால் பிரச்சனைகளை தவிர்க்கும் பொருட்டு எதிர்மனுதாரர் தனிக்குடித்தனம் அழைத்துச் சென்றார் என்றும், சொன்னால் அது சரியல்ல. எதிர்மனுதாரரின் வீட்டிலேயே மேல்மாடியில் தனிக்குடித்தனம் வைத்தார் என்பது சரிதான். நானும், எதிர்மனுதாரரும் தனிக்குடித்தனம் இருந்தபோது எங்களுக்குள் பிரச்சனை ஏதும் இல்லை என்றால் அது சரியல்ல. எதிர்மனுதாரரின் தாயார் சொல்பேச்சு கேட்டு எதிர்மனுதாரர் என்னிடம் பிரச்சனை செய்வார். துவக்கத்தில் இருந்தே எதிர்மனுதாரரோடு நான் சேர்ந்து வாழ விரும்பவில்லை என்றும், அதனால் நான் தான் பிரச்சனை செய்தேன் என்றும் சொன்னால் அது சரியல்ல. எங்களது தலைதீபாவளிக்கு பெற்றோர் வீட்டிற்கு சென்று என் கணவர் மட்டும் திரும்பினார். 2 நாள் கழித்து என்னை அழைத்து செல்வதாக சொன்னார். பின்னர் 2 நாள் கழித்து என்னை அழைத்துச் சென்றார். அப்போது நாங்கள் இருவர் மட்டும் தான் சென்றோம். தலைதீபாவளி சீர்வரிசை என் சகோதரர் எடுத்துவந்தபோது அதனை எதிர்மனுதாரரின் தாயார் பெறமறுத்துவிட்டதாக நான் சொல்வது பொய் என்றும், நாங்கள் இருவர் மட்டுமே திரும்பினோம் என்றும், சொன்னால் அது சரியல்ல. பின்னர் உத்திரமேரூரில் நானும், என் கணவரும் தனிக்குடித்தனம் இருந்தோம். என் கணவரின் தாயார் செய்த பிரச்சனைகள் தாங்காமல் நாங்கள் உத்திரமேரூர்க்கு தனிக்குடித்தனம் வந்தோம். உத்திரமேரூரில் இருந்தபோதும் எங்களுக்குள் பிரச்சனை இல்லாமல் இல்லை. என் கணவரின் தாயார் அடிக்கடி போன் மூலம் என் கணவரிடம் பேசி அதன் காரணமாக என் கணவர் என்னிடம் பிரச்சனை செய்வார். எதிர்மனுதாரரோடு சேர்ந்து வாழ விருப்பம் இல்லாமல் நான் தான் அவரை திட்டி அடித்து பிரச்சனை செய்தேன் என்பது சரியல்ல. நானும், என் கணவரும் மருத்துவ பரிசோதனைக்கு சென்றுள்ளோம். காஞ்சிபுரத்தில் ரேனுகா என்ற மருத்துவரிடம் சென்றோம். அதற்கான மருத்துவ பரிசோதனை சான்றுகளை இந்த மனுவில் தாக்கல் செய்யவில்லை. மருத்துவ பரிசோதனையில் எனக்கும், எதிர்மனுதாரருக்கும் உடல்ரீதியான பிரச்சனைகள் இருந்தது தெரியவந்தது என்றும்,அதனால் மருத்துவ பரிசோதனை ஆவணங்களை மனுவில் தாக்கல் செய்யவில்லை என்றும், சொன்னால் அது சரியல்ல. உத்திரமேரூரில் வசித்தபோது நான் எதிர்மனுதாரரை அடித்து தள்ளிவிட்டேன் என்றும், அதில் எதிர்மனுதாரருக்கு பல் உடைந்து வீட்டு உரிமையாளர் அவரை மருத்துவ சிகிச்சைக்கு அழைத்து சென்றார் என்றும், சொன்னால் அது சரியல்ல. எதிர்மனுதாரர் தொடக்க கல்வி அலுவலர் அலுவலகத்தில் பதிவறை எழுத்தராக பணிபுரிகிறார்.

அவரது மாதச்சம்பளம் ரூ.60,000/- ஆகும். அசல் மனுவில் எதிர்மனுதாரர் சம்பளம் என எவ்வளவு குறிப்பிட்டுள்ளேன் எனக்கேட்டால் ரூ.30,000/- ஆகும். எனக்கு ஜீவனாம்சமாக ரூ.30,000/- கேட்டுள்ளேன். எனக்கு ஆகக்கூடிய மாத செலவு விவரத்தை விளக்கமாக மனுவில் சொல்லவில்லை. எதிர்மனுதாரரிடமிருந்து பணம் பறிக்க வேண்டும் என்பதற்காக இந்த மனுவை தாக்கல் செய்தேன் என்பது சரியல்ல.